# விடியல் The Dawn
மாத இதழ்

பொழுது - 40
ஆகஸ்ட் 2012


வந்தேமாதரம்


வாஞ்சி நாதன்


ஓர் இந்தியக் குடிமகன்

தனிச்சுற்றுக்கு மட்டும்


காப்பியத் தமிழ் – பன்னாட்டுக் கருத்தரங்கம் (21.07.2012)
(சிறந்த கல்லூரிக்கான விருதுகளுடன் கல்லூரிச் செயலர்)

Vidiyal - 40 - Aug2012
சன் பிரிண்டர் - தி.கோடு, செல்: 97500 20222

# விடியல்

## The Dawn

*மாத இதழ், பொழுது – 40,*
*ஆகஸ்ட், 2012,*
பக்கங்கள் - 32, தனிச்சுற்றுக்கு மட்டும்



*சிறப்பாசிரியர்*
**முனைவர் நா. கண்ணன்**
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
**முனைவர் மா. கார்த்திகேயன்**
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
**முனைவர் ப. சரவணன்**
தமிழ் விரிவுரையாளர்

*ஆசிரியர் குழு*
தமிழ் விரிவுரையாளர்கள்
அனைவரும்



*வெளியீடு:*

**தமிழ்த்துறை**

**கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி**
**(தன்னாட்சி)**
**திருச்செங்கோடு – 637 215,**
**தமிழ்நாடு, இந்தியா.**
E-Mail : vidiyalmagazhine@gmail.com
Blog: ksrcasthamizh.blogspot.in
Website: www.ksrcas.edu



© **K.S.R. College of Arts and Science (Autonomous)**

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the publisher.


# உள்ளடக்கம்

## கட்டுரைகள்


*அரசாணைக்கோல்* 03,
*வாஞ்சிநாதன்* 06,
திவனாகு 11,
*வேற்றுமையில் ஒற்றுமை* 10,
*வந்தேமாதரம்* 15,
*தொடரட்டும் போராட்டம்* 20,
*பெற்றது சுதந்திரமா?* 20,
*சுதந்திரப் போராட்டம்* 21,
*ஆஸ்கார் விருது* 23


## கவிதைகள்

**சுதந்திரதினச் சிறப்புக் கவிதைகள்**


*நிலா,* 03, *அம்மா, நண்பன்* 04
*அம்மாவின் கேள்வி* 04,
*தோழி* 09, *அம்ம்மாஆ* 21,
*உன்னத உள்ளம்* 05,
*என்று மாறும்* 05,
*வறுமைக்கே(ா)டு, சுற்றுச் சூழல்* 05,
*சில கருத்துகள், பூக்கள்* 09,
*தாய்க்கடவுள், கோபம்-அன்பு* 09,
*போராட்டம் முடியவில்லை* 21,
*எதார்த்தம், நட்(பூ)பு* 32


## நிகழ்ச்சி


*பன்னாட்டுக் கருத்தரங்கம்* 18


## சங்கச் சாரல் - 05


*இனிய மொழி* 13


## சரித்திரக் கட்டுரை - 08


*மாயன் நாட்காட்டி* 24

அனைவருக்கும் வணக்கம்!
இளங்கலை மற்றும் முதுகலையில் முதலாண்டு பயில்வதற்காக வந்துள்ள அனைத்து மாணாக்கர்களையும் விடியல் இதழ் வரவேற்கிறது.
படைப்பூக்கம் மிக்க மாணாக்கர்களின் தொடர்முயற்சியின் பின்விளைவாக விடியல் இதழ் இந்த இதழ் முதல் 32 பக்கங்களைக் கொண்டதாக வெளிவருகின்றது. அதற்கு அனுமதியளித்த கல்லூரி நிர்வாகத்திற்கும் முதல்வருக்கும் தமிழ்த் துறைத்தலைவருக்கும் நன்றி.
அனைவருக்கும் சுதந்திரத் திருநாள் வாழ்த்துகள். நன்றி!
- இணை ஆசிரியர்

# சுதந்திரப் பயிர்

பி. சுபஸ்ரீ
இளங்கலை கணிதவியல்துறை முதலாண்டு
'ஆ' பிரிவு

"உயிர் விதையைப் போட்டு,
அகிம்சையால் களை எடுத்து,
இரத்த நீரைத் தெளித்தோம்.
வறுமைப் பயிர் முளைத்தது.
அடிமைச் செடி செழித்தது.
மீண்டுமொரு மாற்றம் - அது
இந்தியரின் ஏமாற்றம்"

# வறுமையின் சுதந்திரம்

ஆ. பாலகிருஷ்ணன்
இளங்கலை உயிர்த்தொழில்நுட்பத்துறை
முதலாண்டு

"சுதந்திரத்திற்காக
உயிரைவிட்டனர் அன்று.
சுதந்திரத்தால்
உயிரையெடுக்கின்றனர் இன்று.
எங்கே சுதந்திரம் என்று
தேடக்கூட நேரமில்லை நமக்கு.
உயிரைவிடுவதா? இல்லை
ஊரைவிட்டு ஓடுவதா? என்று
தெரியவில்லை எனக்கு."

# சுதந்திரப் பூ

கே. நந்தினி
இளங்கலை கணிதவியல்துறை
முதலாண்டு 'ஆ' பிரிவு

"இந்தியத்தாயின் வெண்மனத்தைக்
கலங்கப்படுத்த வந்தானே அந்நியன்
வெள்ளையனாக!
தாயின் சிவந்த பாதம்
தொடுமிடமெல்லாம் செந்நீர்
ஆறாய் ஓட!
உப்புக்குப் போராடித் தப்புகளை
விரட்ட வந்தாரே
நம் தலைவர்!
சூரிய ஒளியால் ஆம்பல்
மலர்வதைப் போல நம்
தலைவர் ஒளியால் - அடிமை
இருள் நீங்க, பூத்ததே
சுதந்திரப் பூ - பாரெங்கும்
இந்திய மணம் வீச."

# அரசானைக்கோல்

இந்தியாவில் பல்வேறு சமயங்கள் உண்டு. ஒவ்வொரு சமயத்திற்கும் ஒவ்வொரு திருமணச் சடங்கு உண்டு.

திருமணச் சடங்குகளில் ஒவ்வொரு பொருளுக்கும் தனிச்சிறப்பு உண்டு. அரசானைக்கோல் என்பது 'அரசானிக் கால்' என்று மருவி விட்டது.

அரசானைக்கோல் வழிபடு வதற்குரிய முதன்மைக்காரணம் என்ன வெனில், முடியாச்சியாக இருந்த காலத்தில் அரசரைத் திருமணத்திற்கும் அழைக்க வேண்டும் என்பது மரபாக இருந்தது. அக்காலத்தில் அரசரை அழைத்த திருமணம் மட்டுமே செல்லுபடியாகும்.

ஆனால், எல்லாத் திருமணங் களுக்கும் அரசர் வரமாட்டார். அரசர் சார்பில் அரசாங்கத்திலிருந்து அவர வர் குலத்திற்கு ஏற்ப அரசு, மூங்கில், வேம்பு, பால் விருட்சங் களின் கொம்புகள் அனுப்பி வைக்கப் படும்.

அக்கொம்பினை மணமக்கள் வீட்டார் பெற்றுக் கொண்டு அரசருக்குச் செய்யக் கூடிய மரியாதையை அக் கொம்பிற்குச் செய்வர். அக் கொம்புதான் 'அரசானைக்கோல்' ஆகும். பின்நாளில் அரசானிக்கால் என்று மாறி இன்றும் இக் காலத்திலும் வழிபாடு செய்யப்படுகின்றது.

***முனைவர் மா. கார்த்திகேயன்***
தமிழ்த்துறைத்தலைவர்

# நிலா

**தே. ஜீவிதா**
இளங்கலை கணினி பயன்பாட்டுத்துறை
முதலாண்டு 'இ' பிரிவு

*"மேகக் கூட்டங்களுக்கு இடையே*
*வந்துசெல்லும் தேவதையே.*
*உன் அழகைக் காணவும்*
*உன் ஒளியால் மலரவும் நான்*
*பூவாகப் பூத்திருப்பேன்.*
*நட்சத்திரக் கூட்டங்களுக்கு*
*இடையே*
*வெள்ளை நிறத்தில் பூக்கும் பூவே!*
*வானில் நீ*
*தோன்றினாலும் மறைந்தாலும்*
*நீயேதான் அழியாதப் பேரழகி"*

## அம்மா

ம. விஷ்ணுபிரியா
இளங்கலை கணினி அறிவியல்துறை
முதலாண்டு 'ஆ' பிரிவு

*"அம்மா! என்று நீ*

*சொல்லும் ஒரு சொல்லுக்காக*

*ஓராயிரம் முறை*

*அம்மா!அம்மா!*

*என்று அலறியிருப்பாள்*

*உன் தாய் - தன்*

*பிரசவத்தில்"*

## நண்பன்

எம். ராஜலஷ்மி
இளங்கலை வணிகவியல் (கணினி)துறை
முதலாண்டு 'ஆ' பிரிவு

*"துன்பத்தில் தோள் கொடுத்தாய்!*

*இன்பத்தில் இசை கொடுத்தாய்!*

*தாயைப் போல் தாங்கினாய்.*

*தந்தையைப் போல் திருத்தினாய்.*

*வெற்றியின் ரகசியத்தைக்*

*கற்றுத் தந்தாய்.*

*விவேகத்தை உள்ளூட்டினாய்.*

*உறக்கத்திலும் உயிர்த்தெழுந்தாய்.*

*ஊக்கமாய் உள்நின்றாய்.*

*உன்னைக் காண*

*இரு வழிகள் மூடி விழுந்தேன் -*

*கடலின் உள்ளே.*

*எழுந்தேன் முத்தாக -*

*உன் உயிரின் உள்ளே!"*

## அம்மாவின் கேள்வி

வி. ரவீணா
இளங்கலை கணினி பயன்பாட்டுத்துறை
முதலாண்டு 'இ' பிரிவு

*"எத்தனையோ முறை நீ என்னை*

*உதைத்திருக்கிறாய்! நான்*

*உன்னை அடிக்கவில்லை.*

*எனக்காக நான் ஒன்றும்*

*தேடிக்கொண்டதில்லை.*

*எல்லாவற்றையும் நான்*

*உனக்காகப் பார்த்துப் பார்த்துச்*

*செய்தேன்!*

*இப்போதும் நான்*

*உன்னையேதான் நினைக்கிறேன்!*

*ஆனால் நீ மட்டும்*

*என்னை ஏன் ஒதுக்கினாய்?*

*உன்னைவிட்டு, என்னை விலக்கி*

*ஒரு முதியோர் இல்லத்தில்?"*

# சுற்றுச் சூழல்

**ப. அரவிந்த்**
இளங்கலை கணினி அறிவியல்துறை
முதலாண்டு 'ஈ' பிரிவு

*"நல்ல சூழல் எனும்*

*இடம்வாங்கு. அதில்*

*சுற்றம் எனும் வீடுகட்டு.*

*நல்ல சூழலை நிலை நிறுத்த*

*நன்மை தரும் தாவரங்களை வளர்.*

*நம் தலைமுறை தலைத்தோங்கும்.*

*சுற்றுச் சூழலை நேசி!*

*அது மாசடையுமா யோசி!*

# என்று மாறும்

**கே. கோபிகா**
இளங்கலை கணிதவியல்துறை முதலாண்டு
'ஆ' பிரிவு

*"அன்று கண்டான்*

*நெருப்பை.*

*இன்று கண்டான்*

*வறுமையின் துடிப்பை.*

*படிக்கத் துடிக்கும் மனத்தில்*

*வறுமை விளைந்ததால்*

*கல்வியைக் காணவேண்டிய*

*கண்கள் இன்றோ*

*ஒருவேளை உணவைக்*

*காணத் தவிக்கின்றன.*

*ஐயோ! இந்நிலை*

*என்றுதான் மாறுமோ?"*

# உன்னத உள்ளம்

**கோ. நிஜந்தன்**
இளங்கலை கணினி பயன்பாட்டுத்துறை
முதலாண்டு 'ஈ' பிரிவு

*"கிள்ளுகின்ற விரல்களுக்கும்*

*சுகம்தரும் உன்னத உள்ளம்*

*பூக்களுக்கு மட்டுமே உண்டு"*

# வறுமைக் கே(ா)டு

**வி. நந்தினி**
இளங்கலை கணிதவியல்துறை
முதலாண்டு 'ஆ' பிரிவு

*"வறுமை –*

*இறைவன் கொடுத்த*

*பெருஞ்சாபம்.*

*பசி, பட்டினி, கண்ணீர்!*

*எத்தனை உண்டு உன்னுள்?*

*இறவைா நீ இட்ட*

*வறுமைக்கோட்டை நீக்க*

*நீயே வழி*

*கூறுவாய்!"*

# சுதந்திரம்

**ஆர். பி. மீனா**
இளங்கலை கணினி பயன்பாட்டுத்துறை
முதலாண்டு 'இ' பிரிவு

*"ஆயிரம் காலம் அடிமை*
*வாழ்க்கை நடத்தி*
*அகிம்சை தந்தை மூலம்*
*பெற்ற சுந்திரம் இன்று*
*எங்கு சென்றது?*

*அகிம்சையைப் பின்பற்றி*
*அமைதி வழியில்*
*சுதந்திரம் அடைந்தோம்.*
*ஆனால், இன்று*
*அமைதியின்றி நாடு முழுவதும்*
*திவிரவாதப் பேயால்*
*அழுகிறோம்! அழிகிறோம்!*

*எத்தனையோ பேர்*
*செந்நீர் சிந்தி பெற்ற*
*சுதந்திரம் - இன்று*
*கரைகிறது என் நாட்டு*
*மக்களின் கண்ணீரால்!*

# வாஞ்சிநாதன்

திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டையில், 1886ஆம் ஆண்டு ரகுபதி ஐயர், ருக்மணி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர் வாஞ்சிநாதன்.

இவரது இயற்பெயர் சங்கரன். எனினும் இவர் வாஞ்சி என்றே அழைக்கப்பட்டார். வாஞ்சி செங் கோட்டையில் பள்ளிப் படிப்பை முடித்ததும், திருவனந்த புரத்திலுள்ள மூலம் திருநாள் மகாராஜா கல்லூரியில் பி.ஏ.வரை படித்தார். கல்லூரியில் படிக்கும் போதே முன்னீர் பள்ளம் சீதாராமய்யாரின் மூத்த புதல்வியான பொன்னம்மாளை மணந்தார். கல்லூரிப் படிப்பு முடிந்ததும், புனலூர் காட்டிலாகாவில் பணியாற்றினார்.

அந்நாளில் பிரித்தானிய அரசாங்கத்தை எதிர்த்து நாடெங்கும் நடத்தப்பட்ட போராட்டம் உச்சகட்ட நிலையிலிருந்தது. வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா ஆகியோரின் மேடைப் பேச்சுக்களால் வாஞ்சியும்

விடுதலைப் போராட்டத்தில் தீவிரமானார்.

இந்தியாவில் ஆங்கிலேயருக்கு எதிராகச் செயல்படும் தீவிரவாதிகளுக்கு பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்த புதுச்சேரியில் உதவிகள் கிடைத்தன. அங்குள்ள தீவிரவாதிகளுடன் தொடர்பு கொண்டார். காலப்போக்கில் தமது அரசுப் பணியில் இருந்து விலகிப் புரட்சிப் பாதையில் தீவிரமானார். நண்பர்களுடன், ஆங்கிலேய ஆட்சியை ஒழித்துக்கட்ட ரகசியக் கூட்டங்களைக் கூட்டினார். நண்பர்களையும் தீவிரம் அடையச் செய்தார்.





புதுவையில் வாஞ்சி புரட்சியாளர் வ. வே. சு. ஐயர் வீட்டில் தங்குவது உண்டு. அங்கு மகாகவி பாரதியாரையும் சந்திப்பார். எருக்கூர் நீலகண்ட பிரம்மச்சாரியின் ரகசிய



இரத்தப் புரட்சி பிரமாணங் களினால் வாஞ்சியின் மனம் மேலும் தீவிரம் அடைந்தது. இந்தியர்கள் நடத்திவந்த சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியை இந்தியர்கள் நடத்தக் கூடாதென்று தடுத்தது வெள்ளையர் அரசாங்கம். இதற்காகப் பாடுபட்டு வந்த வ.உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா இருவரையும் கைது செய்து சிறையில் அடைத்தது. இக்காரணங்களினால் திருநெல்வேலி கலெக்டராக இருந்த ஆஷ் துரையைக் கொல்ல வாஞ்சி முடிவு செய்தார்.

1911 ஜுன் 17 காலை 10.45 மணிக்கு மணியாச்சி தொடருந்து சந்திப்பில் திருநெல்வேலி கலெக்டர் ஆஷ்துரை தனது மனைவியோடு கொடைக் கானலுக்குச் செல்ல வண்டியின் முதல் வகுப்புப் பெட்டியில் அமர்ந்திருந்தார். அந்நேரம்

வெளியில் உலாவிக் கொண்டிருந்த வாஞ்சி, புகைவண்டியில் அமர்ந்திருந்த கலெக்டர் ஆஷ் துரையைத் தனது துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டு, அதே துப்பாக்கியால் தன்னையும் சுட்டுக் கொண்டு மரணம் அடைந்தார்.



வாஞ்சியின் பிரேத விசாரணையில், அவர் போட்டிருந்த உள்சட்டையில் இருந்த துண்டுக் கடிதத்தில் கலெக்டரைச் சுட்டுக் கொன்றதற்கான காரணமும், சென்னையில் 3,000-த்திற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் தன்னுடன் இருப்பதாகவும் குறிப்பிட்டு ஆர். வாஞ்சி ஐயர், செங்கோட்டை என்றெழுதி இருந்தது. திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் கொலை வழக்கு இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கியமான தாகும். முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி வாஞ்சி மரணம் அடைந்த மணியாச்சி ரயில் நிலையத்திற்கு வாஞ்சி-மணியாச்சி ரயில் சந்திப்பு என்ற சூட்டினார். வாஞ்சி பிறந்த செங்கோட்டையில் அவருக்கு உருவச் சிலையும் திறந்து வைக்கப்பட்டது.

ராபர்ட் வில்லியம் எஸ்கோர்ட் ஆஷ் (Robert William Escourt Ashe) ICS (இந்திய நிர்வாகப் பணி) (பிறப்பு- நவம்பர் 23, 1872. இறப்ப - ஜூன் 17, 1911) பிரிட்டிஷ் அரசின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தின் தற்காலிக ஆட்சியாளராகவும் நீதிபதியாகவும் இருந்தவர். திருநெல்வேலிக்கும் தூத்துக் குடிக்கும் இடையேயுள்ள மணியாச்சி ரயில்சந்திப்பு நிலையத்தில் சுட்டுக் கொல்லப் பட்டார். இந்தியச் சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் போது தென்னிந்தியாவில் படுகொலை செய்யப்பட்ட பிரிட்டானிய ஆட்சி யாளர் ஆஷ் ஒருவர் மட்டும்தான். பிரிட்டிஷ் அரசு 1913இல் தூத்துக்குடியில் அவருக்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்பியது.



# பூக்கள்

**எஸ். ராஜேஸ்வரி**
இளங்கலை வேதியியல்துறை முதலாண்டு

*“பூக்கள் -*

*காம்பின் கைப்பிடியில்*

*விரிந்த வண்ணக்குடை.*

*மகரந்த சூல்களைச் சுமக்கும்*

*கர்ப்பிணி.*

*இதழ்களாலே செய்த முகம்.*

*மழையின் இசைக்கேட்டுத்*

*தலை ஆட்டும் அழகி.*

*காற்றில் அணையாத தீபம்.*

*வேர்க்கால்கள் புதைந்தாலும்*

*வாசங்களால் வலம் வரும்*

*வானவில்.*

*கூந்தல் விழுதில்*

*ஊஞ்சலாடும் குழந்தை.*

*பனித்துளிகள் பாடம் எழுதும்*

*கவிதை நோட்டு.”*

# சில கருத்துகள்

**எஸ். ராஜ்குமார்**
இளங்கலை நுண்ணுயிரியல்துறை
முதலாண்டு

*“பிரிவு –*

*மறக்க முடியாத வலி.*

*நினைவு –*

*திருட முடியாத சுகம்.”*

*“கண்ணுக்கு உலகம் தெரியும்*

*கண்ணீருக்கு உள்ளம் தெரியும்”*

*“விழுந்த உடன் மறையும்*

*மழைத்துளி அல்ல – நட்பு.*

*இறுதி வரை இருக்கும்*

*கண்ணீர்த்துளி”*

# தோழி

**ச. வாஹினி**
இளங்கலை நுண்ணுயிரியல்துறை
முதலாண்டு

*“நான் உன் பின்னால் இருப்பேன்*

*நீ சிரிக்கும் ஒவ்வொரு நொடியும்*

*உன் சிரிப்பை ரசிக்கவும்.*

*நீ அழுதுவிட்டால்*

*அணைத்துக்கொள்ளவும்.”*

## வேற்றுமையில் ஒற்றுமை

**எஸ். வினு**
இளங்கலை கணிதவியல்துறை முதலாண்டு
'ஆ' பிரிவு

நம் நாடு 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் நாள் இரவில் சுதந்திரம் பெற்றது. இரவில் சுதந்திரம் பெற்றதால் என்னவோ இன்றளவும் இருண்டே கிடக்கிறது. இன்றும் நம் நாட்டில் சாதிச் சண்டை, மதச்சண்டை, இனச் சண்டை இருந்துகொண்டே இருக்கிறது. அனைத்து இடங்களிலும் தீவிரவாதம் மற்றும் கலவரங்கள் தலைத் தோங்கிய வண்ணமே உள்ளன. புனித பூமியாக இருக்க வேண்டிய இந்தியா இன்று யுத்த பூமியாக இருக்கிறது. இருந்தும் இந்தியா ஏராளமான வெற்றிகளையும் கண்டுள்ளது.

இந்திய மக்கள் பேசும்மொழி, வாழும் மாநிலம் என வேறுபட்டாலும் அவர்களின் 'இந்தியர்' என்னும் உணர்வினால் ஒன்றுபடுகின்றனர். இந்த ஒற்றுமை யின் விளைவாகத்தான் வேறு எந்த நாட்டினாலும் நம்மை வீழ்த்த முடிவதில்லை. இதன் காரணமாகவே 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' மற்றும் 'ஒற்றுமையே பலம்' என்ற பழமொழிகள் எழுந்தவோ!

மாபெரும் தலைவர்கள் மற்றும் ஏராளமான மக்கள் சிந்திய செங்குருதிக்கு அன்றே பலன் கிடைத்தது. இந்த ஒற்றுமை என்றுமே நீடித்தால் இந்தியா நிச்சயமாக வல்லரசு நாடாக மாறிவிடும். வந்தே மாதரம்!

## தாய்க் கடவுள்

**மைதிலி**
இளங்கலை நுண்ணுயிரியல்துறை
முதலாண்டு

*"உலகில் உண்டு பல கடவுள்.*
*உன்னை எனக்குத்*
*தோழியாகத் தந்த உன் தாயும்*
*எனக்குக் கடவுள்தான்!"*

## கோபம் - அன்பு

**டி. வித்யா**
இளங்கலை நுண்ணுயிரியல்துறை
முதலாண்டு

*"உன் கோபம்*
*உன்னை நேசிப்பவர்களை*
*வெறுக்க வைக்கும் - ஆனால்,*
*உன் அன்பு*
*உன்னை வெறுப்பவர்களை*
*நேசிக்க வைக்கும்."*

# திவனாகு

எ. சுரேஷ்
இளங்கலை நுண்ணுயிரியியல்துறை
மூன்றாமாண்டு

உலகின் மிகப் பழைய நகரங்களுள் ஒன்று திவனாகு. நாலாயிரம் மீட்டர் உயரத்தில் அமைந்திருக்கும் நகரம். வியக்க வைக்கும் கட்டடக் கலையைப் பிரதிபலிக்கும் நகரம்.

தென்அமெரிக்க நாடான பொலிவியாவில் அமைந்த ஒரு வரலாற்றுத் தலம் தான் திவனாகு. பொலிவியாவின் தலைநகரம் 'லா பாஸி'ற்கு அருகிலும், உலகிலேயே உயரமான இடத்திலமைந்த (ஏரியான) டிடிகாகா ஏரிக்கு அருகிலும் அமைந்திருக்கிறது இந்நகரம். திவனாகு மக்களைப் பற்றிய எழுத்துப்பூர்வமான சான்றுகள் எதுவும் கிடைக்கா விட்டாலும், அவர்கள் நிர்மானித்த நகரமும், சூரையாடலிற்குப் பிறகு எஞ்சி நிற்கும் கட்டடங்களும் அவர்களின் சிறப்பை உலகிற்கு உரைக்கின்றன.

அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த மண்பாண்டங்கள், எழில்மிகு சிற்பங்கள், தூண்கள், சிதைந்த பிரமிட்கள் என எஞ்சி நிற்கிறது திவனாகு. சில தூண்கள் 100 டன்கள் எடை கொண்டதாகவும், ஒன்றோடு ஒன்றாக சேர்த்து திடமாக நிற்கும் படியாகக் (ஆங்கில எழுத்து 'ர' வடிவத் திலான) கற்களைச் செதுக்கிக் கட்டடங்களை வடித்துள்ளார்கள். 10 மைல் தொலைவில் கல்கு வாரிகள் இல்லாதபோது எப்படி மிகப் பெரிய கற்களைச் சேகரித் திருப்பார்கள் என்பது வியப் பாகவே உள்ளது.

எகிப்து, மெக்சிகோ போன்ற இடங்களில் இருப்பதைப் போல பிரமிட்களும் திவனாகு நகரத்தின் 'அகாபானா' என்ற இடத்தில் அமைத்திருக்கிறார்கள். ஆனால் அவையாவும் காலத்தின் மாறுதல் களுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் சிதைந்த நிலையில் உள்ளன.

திவனாகு மக்களின் கடவுளான விரகோகாவை வழிபடு வதற்காக, நகரின் பிரதானமாக ஒரு வாயிலை எழுப்பியுள்ளார்கள். படைக்கும் கடவுளாகச் சூரியன் சந்திரன் என அகில உலகத்தையும் உருவாக்கியவர் என்று திவனாகு மக்களால் கருதப்பட்டிருகிறார், விரகோகா.

சூரியனைத் தலைக்கவசமாகவும் கையில் ஆயுதங்களை ஏந்தியபடியான சிலைகளைப் பார்க்கும் பொழுது உலகெங்கிலும் உள்ள மக்கள் எப்படி ஒரே மாதிரியான எண்ண ஓட்டங்களைக் கொண்டிருந்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது.

தொல்லியல் ஆய்வாளர்கள், திவனாகு மக்கள் கி.பி.1000 வரை இந்நகரத்தில் வாழ்ந்து வந்ததாகக் கருதுகின்றனர். டிடிகாகா ஏரிக்கரையில் விவசாயம் செய்தும், நல்ல விளைச்சலால் மற்ற நாடுகளுடன் வணிகம் செய்ததாகவும் கருதுகின்றனர். கி.பி. 600 முதல் கி.பி.700 வரை இவர்களின் தாக்கம் இன்றைய பெரு, பொலிவியா மற்றும் சிலி போன்ற நாடுகளிலும் இருந்திருக்கிறது. காலநிலை மாற்றத்தால் சரிவர மழை பொழியாததாலும் நீராதாரங்கள் பொய்த்துப் போனதாலும் திவனாகு மக்கள் இடம்பெயர்ந்திருக்கின்றனர்.

இந்நகரம், கி.பி.15ஆம் நூற்றாண்டில் இன்கா மன்னர்கள் கண்டு பிடிக்கும் வரை தொடர்பில்லாமல் இருந்திருக் கிறது. இன்கா அரசின் அழிவிற்குப் பின்னர் கி.பி. 19ஆம் நூற்றாண்டில் பிற்பகுதி வரை மீண்டும் தொடர்பிலிருந்து துண்டிக்கப் பட்டிருக்கிறது.



புதையல் தேடுபவர்களாலும், புதிதாக வீடுகளைக் கட்டுபவர் களாலும், ஸ்பானிஸ் படையெடுப்பு களாலும் சிதைக்கப்பட்ட இந்நகரம் இன்று பொலிவியா அரசால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. முன்னோர்களின் வரலாறு எதுவும் இல்லாத பொலிவியா நாட்டு மக்கள் திவனாகு நகரையும் அவர்கள் விட்டுச்சென்ற கால்தடத்தையும் தேட ஆரம்பித்துள்ளனர்.

***http://www.archaeology.org/interactive/tiwanaku/***
***http://www.crystalinks.com/tiahuanaco.html***
***http://en.wikipedia.org/wiki/Tiwanaku***

*சங்கச் சாரல் - 05*

# இனிய மொழி

பிறரை உவந்து பாராட்டும் பழக்கம் இல்லாதவர்கள் பலரைக் காண் கின்றோம். இவர்களுக்கு நன்றியுணர்வும் இல்லை, பரந்துபட்ட இதயமும் இல்லை. தேவை என்ற போது தேடிக்கொள்வார்கள். தேவைகள் முடிந்த பின்பு திரும்பிக் கொள்வார்கள். உதவிகள் செய்யும் நண்பர்கள் கூட இவர்கள் கண்களுக்குத் தெரிவ தில்லை. இவ்வாறான மனிதர்கள் வெளி உலகில் மட்டுமின்றி அக உலகமாகிய தமது குடும்ப வாழ்விலும் அவ்வாறே நடந்து கொள்கின்றனர். இக்குணங்கள் கொடியவை, இவற்றை மாற்ற வேண்டும்.

ஒருவர் நமக்கு உதவிகள் செய்யும்போது அவர்களுக்கு 'நன்றி' என்றும் 'சிறப்பான உதவி. மிக்க நன்றி' என்றும் மறுமொழிகள் கூறவேண்டும். உதவ முடியா நிலையில் இருந்தாலும் அவர்களின் மனத்திற்கு ஆறுதலாக ஓர் இரு வார்த்தைகளையாவது சொல்ல வேண்டும். அதையும் செய்யத் தவறி னாலும் அவர்கள் மனத்தைக் காயப்படுத்தாது இருக்கவேண்டும். இவ்வாறு வாழ்வதே மனித இயல்பாகும்.

புறவாழ்க்கையில் இவ்வாறு நடந்துகொள்வதைப் போல அகவாழ்விலும் நாம் இதைக் கடைப்பிடிக்க வேண்டும். புறவாழ்வில் உள்ள மொழிகளையும் கடந்து காதல் மொழிகளை அகவாழ்வில் கூற வேண்டும்.

காதல்மொழியைக் காதலில் கூடிக்களிப்பதற்காக மட்டும் பயன் படுத்தக் கூடாது. காதலித்த நபரைக் கூடிக்களித்த பின்பும் கூற வேண்டும். இவ்வாறான நிலையில் வாழ்ந்து வரும் தலைவன் தலைவியரைச் சங்க இலக்கியப் புலவர் சிறைக்குடி ஆந்தையார் நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார்.

களவு வாழ்வில் தலைவன் நமக்கே உரிமையுடையவன். நம்முடைய வாழ்வு இவருடனே அமைகின்றது என்ற அசையாத உள்ளம் உடையவள் தலைவி. இத் தலைவி காதலே தன் வாழ்வு - தன்னை விரும்பும் இத்தலைவனே தன் கணவன் என்று எண்ணி வாழ்கின்றாள்.

இக்காதலியே தன் மனைவி - இவளே நம் வாழ்வு என்று வாழ்கின்றான் தலைவன். உள்ளம் ஒன்றிய தலைவன் - தலைவியர் தங்களின் அன்பு வாழ்வைத் தொடங்குகின்றனர். இருவரும் மகிழ்ந்த நிலையில் தலைவன்,

தலைவியை விடுத்துச் செல்லவில்லை. இன்பம் தந்த தலைவியை எண்ணி, எண்ணி மகிழ்ச்சியடைகிறான். அவள் தந்த இன்பத்திற்குக் காதல் மொழி கூறுகின்றான்.

தலைவன் கூற்று: ‘குவளை மலரின் மணம் வீசுகின்ற அடர்த்தியான கருங் கூந்தலை உடையவளே! ஆம்பல் மலரின் மணம் வீசுகின்ற, தேன் போன்று இனிதாகவும் பார்ப்பதற்குப் பவளம் போன்றதாகவும் உடைய வாயை உடையவளே! தாமரையின் தாதுக்கள் போன்ற நிறத்தை உடையவளே! நீ என்னிடம் உன்னைக் கொடுத்தாய் நான் என்றும் உன்னைப் பிரியாது இருப்பேன்’ என்று கூற. இவன் வார்த்தைகளில் ‘பிரியாது இருப்பேன்’ என்பதைக்கேட்ட தலைவி பிரிவு என்ற ஒன்றும் வாழ்வில் உண்டோ என எண்ணி வருந்துகின்றாள். தலைவன் குறிப்பால் அவளின் அச்சத்தை அறிகிறான். அச்சத்தைப் போக்கும் விதமாக உவமை கூறுகின்றான். இத்தலைவனின் கூற்றா னது,

***“குவளை நாறும் குவை இருங் கூந்தல்***
***ஆம்பல் நாறும் தேம்பொதி துவர்வாய்***
***குண்டுநீர்த் தாமரைக் கொக்கின் அன்ன***
***நுண்பல் தித்தி மாவுயோயே***
***நீயே அஞ்சல் என்ற என் சொல் அஞ்சலையே***
***யானே குறுங்கால் அன்னம் குவவுமணல் சேக்கும்***
***கடல் சூழ் மண்டிலம் பெறினும்***
***விடல் சூழலன் யான் நின்னுடை நட்பே”***

(குறுந்தொகை - 300)

என்று இடம்பெறுகிறது.

இதனுள் குவளை, ஆம்பல், தாமரை எனும் நீர்ப்பூக்களைத் தலைவிக்கு ஒப்புமை கூறுகின்றான். ‘நீர்ப்பூக்கள் நீரினை விடுத்து வாழ்வதற்கு இயலாத் தன்மையன. அதுபோலவே நீயும் என்னை விடுத்து வாழ இயலாத் தன்மையுடையவள். அதனால் பிரியேன்’ என்று தன் கருத்தை உவமையின் வழியே கூறுகின்றான்.

தன் கருத்தை இன்னும் உறுதிப்படுத்த நினைத்த தலைவன், அன்னப் பறவை தங்கியிருக்கும் குவிந்த மணற்பரப்பை உடைய கடலால் சூழப்பட்ட இந்நில உலகமே பெறுவதாயினும் நான் நின்னுடைய அன்பைப் பிரிய மாட்டேன் என்றும் கூறுகின்றான்.

மருத நிலத்து அன்னப் பறவை நெய்தல் நிலத்தில் தங்கும் என்பதால் நீயும் திருமணம் நடைபெற்று என் மனையில் தங்குவாய் என்பதையும் சுட்டுகின் றான்.

இதனுள் தலைவனின் காதல் மொழி சிறந்து விளங்குவதை அறியமுடிகின்றது. இத்தலைவன், தலைவியின் குணங்களையும் அவளின் குறிப்பையும் உணர்ந்து அவளை மகிழ்விக்கும் படிப் பேசுவதைக் காண முடிகின்றது.

இக்காதல் மொழி இல்லறம் இனிதாக நடப்பதற்கு அடிப்படையாக அமையும். இவ்வாறான அன்பு மொழிகளை, நாகரிகம் உணர்ந்து ஏற்கும் விதங்களில் பேசுதல் வேண்டும். ஆணவத்தால் சாதிப்பதைவிட அன்பால் பெரிதும் சாதிக்கலாம். ஆண் என்ற ஆணவமும் தவறு. நான் என்ற தலைக்கணமும் தவறு. அன்பால் மகிழ்வோம். ஆனந்த மாய் வாழ்வோம்.

*சாரலில் மீண்டும் நனைவோம்...*
*முனைவர் த. கண்ணன்*
தமிழ் விரிவுரையாளர்

# வந்தேமாதரம்

'வந்தே மாதரம்' இந்தியாவின் நாட்டுப் பாடலாகும். இப்பாடல் வங்காள மொழியில் பன்கிம் சந்திர சட்டோபாத்யாய் என்பவரால் எழுதப் பட்டது.

பன்கிம் சந்திர சட்டோபாத்யாய் ஆங்கிலேய அரசின் கீழ் பணிபுரிந்த போதே, வந்தே மாதரத்தை எழுதும் எண்ணம் அவருள் இருந்தது. 1870 களில், இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர்கள், God Save the Queen என்று தொடங்கும் இங்கிலாந்து இராணியைப் புகழ்ந்து பாடும் பாடலை மக்களிடையே கட்டாயமாக்கினார்கள். பன்கிம் சந்திரர், இப்பாடலைத் தான் புலமை பெற்றிருந்த வங்காள மொழி மற்றும் சமஸ்கிருத மொழிச் சொற்களைக் கொண்டு ஒரே மூச்சில் எழுதினார். எனினும், முதலில் இப்பாடலில் உள்ள சில சொற்களை உச்சரிப்பதில் இருந்த சிக்கல்களால் இப்பாடல் பெரிதும் விமர்சிக்கப் பட்டது. இப்பாடல், 1882இல் பன்கிம் சந்திரர் எழுதி வெளியிட்ட ஆனந்தமாதா (வங்காள மொழியில் Anondomott என்று உச்சரிக்கப் படுகிறது) என்ற நூலில் முதன்முதலில் காணப்பட்டது. எனினும், இப்பாடல் 1876லேயே எழுதப்பட்டுவிட்டது. அப்பொழுது, ஜாதுனாத் பட்டாச்சார்யா இப்பாடலுக்கு மெட்டமைத்துத் தந்தார். நாட்டளவில், வந்தே மாதரம் (தாய் (மண்ணே) உன்னை வணங்குகிறேன்) என்பதே ஆங்கி லேய அடக்குமுறைக்கு எதிரான விடுதலை முழக்கமாக இருந்தது. இந்திய மக்களிடையே விடுதலை தாகத்தை இப்பாடல் தூண்டி விடக்கூடிய ஆபத்தை உணர்ந்த ஆங்கிலேய ஆட்சியர்கள் இப்பாடலைப் பொது இடங்களில் பாடுவதைத் தடை செய்தனர்.

தடையை மீறிய விடுதலைப் போராட்ட வீரர்களைச் சிறையில் இட்டனர். சுதந்திரப் போராட்டக் காரர்கள் பலரும் இப்பாடலைப் பல்வேறு காலக் கட்டங்களில் பொது மன்றங்களில் பாடினர். இவர் 'வந்தே மாதரம்' என்ற பெயரில் இதழ் ஒன்றைத் தொடங்கினார். 'இப்பாடல் பிரபல மடைவதைக் காண நான் உயிரோடு இல்லாமல் போகலாம். ஆனால், இது ஒவ்வொரு இந்தியனாலும் பாடப்படும்" என்று தன் பாடல் குறித்து தீர்க்கதரிசனமாகக் கூறினார் பன்கிம் சந்திரர். இப்பாடல் வரிகளை அடிப்படையாக வைத்து பல்வேறு இசை மற்றும் கவியாக்க முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன. இப்பாடலின் பல்வேறு வடிவ இசைப்பதிப்புகள் இருபதாம் நூற்றாண்டு முழுக்க வெளியாகின. Leader, அமர் ஆஷா, ஆனந்த்மத் ஆகிய திரைப்படங்களில் இப்பாடலுக்கான காட்சியமைப்புகள் இடம்பெற்றன. அனைத்து இந்திய வானொலி நிலையத்தில் ஒலிபரப்பப் படும் வந்தே மாதரப் பாடலுக்கு ரவிசங்கர் இசைய மைத்துத் தந்ததாக நம்பப்படுகிறது. இன்று வரை, வந்தே மாதரம் என்பது இந்தியர்கள் தங்கள் நாட்டுப்பற்றை வெளிப்படுத்தும் ஒரு முழக்கமாகக் கருதப்படுகிறது. சுதந்திரப் பொன்விழா ஆண்டினை முன்னிட்டு இசைஞர் ஏ.ஆர். ரகுமான் 'தாய் மண்ணே வணக்கம்' என்ற பொருண்மையில் இசைக் கோர்வையை வெளியிட்டார்.

வந்தேமாதரம் இந்தியாவின் நாட்டுப் பண்ணாகப் பல ஆண்டு காலம் கருதப்பட்டு வந்தாலும், இறுதியில் 'ஜன கண மன' நாட்டுப் பண்ணாக முடிவு செய்யப்பட்டது. இசுலாமியர்கள், வந்தே மாதரப் பாடல், நாட்டைத் தாய்க்கும், அதன் மூலம் மறைமுகமாக இந்து தெய்வமான துர்கைக்கும் ஒப்புமைப் படுத்துவதாகக் கருதியதால், சமய சார்பற்ற நாட்டுப்பண்ணை தேர்ந்தெடுக்கும் முகமாக வந்தே மாதரம் நாட்டுப் பண்ணாக்கப் படவில்லை. தவிரவும், வந்தே மாதரப் பாடல் இடம்பெற்றிருந்த பன்கிம் சந்திரரின் நூல் இசுலாமியர்களுக்கு எதிரான கருத்துகளைக் கொண்டிருந்த தாகவும் அவர்கள் கருதினார்கள்.

1937இல் இந்திய தேசிய காங்கிரஸ் இப்பாடலின் தகுதி நிலை குறித்து விரிவாக கலந்துரை யாடியது. பாடலின் முதல் இரு பத்திகள்

தாய்மண்ணின் அழகைப் போற்றிப் பாடுவதாக இருந்தாலும் பிற பத்திகள் தாய் மண்ணைத் துர்கையுடன் ஒப்புமைபடுத்துவதாகக் கருதப்பட்டது. எனவே, பாடலின் முதல் இரு பத்திகளை மட்டும் நாட்டுப் பாடலாக அறிவிப்பது என காங்கிரஸ் அரசு முடிவு செய்தது.

வந்தே மாதரம் நாட்டுப் பாடலாக அறிவிக்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் கொண்டாடும் விதமாக செப்டம்பர் 7, 2006 அன்று இந்தியா முழுக்க அனைத்துப் பள்ளிக் கூடங்களிலும் பகல் 11 மணிக்கு இப்பாடலைப் பாட வேண்டும் என்று இந்திய அரசு அறிவித்தது. இப்பாடலைப் பாடுவது கட்டாயமல்ல என்றும் சமயச் சார்பற்ற முதல் இரண்டு பத்திகளைப் பாடினால் போதும் என்றும் இந்திய அரசால் அறிவிக்கப்பட்டது.

'வந்தே மாதரம்' பாடலின் தமிழ் வடிவம்:

*"தாயே வணங்குகிறோம்!*
*இனிய நீர்*
*இன்சுவைக்கனிகள்*
*தென்திசைக் காற்றின் தெள்ளிய தண்மை*
*மரகதப் பச்சை வயல்களின் மாட்சிமை*
*எங்கள் தாய்*
*தாயே வணங்குகிறோம்!*
*வெண்ணிலவின் ஒளியில் பூரித்திடும் இரவுகள்*
*இதழ் விரித்தெழும் நறுமலர்கள் சொரியும் மரக்கூட்டங்கள்*
*எழில்மிகு புன்னகை*
*இனிமை ததும்பும் ஏற்றமிகு மொழிகள்*
*எங்கள் தாய்*
*சுகமளிப்பவளே*
*வரமருள்பவளே*
*தாயே வணங்குகிறோம்!*
*கோடிக் கோடிக் குரல்கள்*
*உன் திருப்பெயர் முழங்கவும்*
*கோடிக் கோடிக் கரங்கள்*
*உன் காலடிக்கீழ் வாளேந்தி நிற்கவும்*
*அம்மா! என்று உன்னை அழைப்பவர் எவர்?*
*பேராற்றல் பெற்றவள்*
*பேறு தருபவள்*
*பகைவர் படைகளைப் பொசுக்கி அழிப்பவள்*
*எங்கள் தாய்*
*தாயே வணங்குகிறோம்!*
*அறிவு நீ*
*அறம் நீ*
*இதயம் நீ*
*உணர்வும் நீ*
*எம் தோள்களில் பொங்கும் சக்தி நீ*
*எம் உள்ளத்தில் தங்கும் பக்தி நீ*
*எம் ஆலயம் எங்கும் ஆராதனை பெறும்*
*தெய்வச் சிலைகளில் திகழும் ஒளி நீ*
*தாயே வணங்குகிறோம்!*
*ஆயுதப் படைகள் கரங்களில் அணிசெய்யும்*
*அன்னை துர்க்கை நீயே*
*செங்கமல மலர் இதழ்களில் உறையும்*
*செல்வத் திருமகள் நீயே*
*கல்வித் திறம் அருள் கலைமகளும் நீயே*
*தாயே வணங்குகிறோம்!*
*திருமகளே*
*மாசற்ற பண்புகளின் மனையகமே*
*ஒப்புயர்வற்ற எம் தாயகமே*
*இனிய நீரும் இன்சுவைக் கனிகளும் நிறையும் எம் அகமே*
*கருமை அழகியே*
*எளிமை இலங்கும் ஏந்திழையே*
*புன்முறுவல் பூத்தவளே*
*பொன் அணிகள் பூண்டவளே*
*பெற்று வளர்த்தவளே*
*பெருமைகள் அனைத்தும் அளித்தவளே*
*தாயே வணங்குகிறோம்!"*

# நிகழ்ச்சி

கே.எஸ்.ஆர். கல்லூரித் தமிழ்த் துறையும் திருவையாறு தமிழ் ஐயா கல்விக் கழகமும் இணைந்து 21.07.2012 அன்று பன்னாட்டுக் கருத்தரங்கினை நடத்தின.

பேராளர்களின் 600 ஆய்வுக் கட்டுரைகள் ஆறு தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டிருந்தன. அவற்றை, கே.எஸ்.ஆர். கல்விநிறுவனங்களின் செயலர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள் வெளியிட்டார். கருத்தரங்கிற்கு முன்னிலைவகித்து, இக் கருத்தரங்கில் கே.எஸ்.ஆர் கலை அறிவியல் கல்லூரிக்கு வழங்கப்பட்ட 'தமிழகத்தின் தலைசிறந்த கல்லூரிக்கான விருதி'னைப் பெற்றுக் கொண்டார்.

தருமபுர ஆதீன குமாரசாமித் தம்பிரான் அடிகளார் அவர்கள் இக்கருத்தரங்கிற்குத் தலைமை வகித்தார். அப்போது அவர்,

"தமிழ்க் காப்பியங்களில் அதிகம் பேசப்படுவது சிலப்பதிகாரம். சமண காப்பியமான சிலப்பதிகாரம் அனைத்து மதங்களைப் பற்றியும் கூறிச் சமயப் பொறைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. கணவரின் பெயரைச் சொல்வது கூடத் தவறாக இருந்த காலத்தில் தனது கணவர் கோவலன் என்று பாண்டியனிடம் கூறியவர் கண்ணகி. சோமகுண்டம், சூரிய குண்டத்தில் மூழ்கிக் கணவரைப் பெறலாம் என்று தோழிகள் கூறியபோது பீடன்று என்று சொல்லிய கண்ணகி குன்றனைய பொருள் தொலைத்தேன் என்று கோவலன் திரும்பி வந்தபோது சிலம்புள கொள் என்று ஒற்றை வரிகளில் பதிலளிக்கிறார். அதே கண்ணகி பாண்டியன் அரண்மனையில் புயல்போல வார்த்தைகளை அள்ளி வீசுகிறார். வாழ்க்கை வாழத்தான் உள்ளது. இப்படித்தான் வாழ வேண்டும் என்று காப்பியங்கள் கற்றுத் தருகின்றன. காப்பியங்களைப் படித்து அதன் நெறிகளைப் பின்பற்றத் தவறினால் நாடு நாடாக இருக்காது" என்றார்.

முனைவர் சரஸ்வதி ராமநாதன் அவர்கள் சிறப்புரையாற்றினார். இக்கருத்தரங்கில் 250-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

தமிழ்த் துறைத்தலைவர் முனைவர் மா. கார்த்திகேயன் வரவேற்றார். முனைவர் கலை வேந்தன் மாநாட்டின் நோக்கம் பற்றி விளக்கினார்.

திருமலை சமுத்திரம் தொழிலதிபர் கோவிந்தராசன் ஓவியக் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார். பாரதியார் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் இளங்கோ, முனைவர் தாயம்மாள் அறவாணன், அகில இந்திய வானொலி நிலைய நிகழ்ச்சிப் பொறுப்பாளர் சண்முகையா, ஆனைவாரி ஆனந்தன் உள்ளிட்ட பலர் உரையாற்றினர்.

# காப்பியத் திருவிழா

*"அந்தமான் என்னும் அழகிய*
*தீவில் தொடங்கி*
*அர்த்தனாரீஸ்வரர் அருள்தரும்*
*திருச்செங்கோட்டில்*
*நிறைவு பெற்றது மாநாடு.*
*மாநாடா? இல்லையில்லை!*
*அது ஒரு திருவிழா! தமிழ்த்திருவிழா!*
*காப்பியத் திருவிழா!!*

*திருவிழாவெனில் உற்றாரும்*
*உறவினரும் ஒருங்கே கூடுவர். ஆம்!*
*இங்கே, ஆன்றோரும் சான்றோரும்*
*கற்றோரும் கருத்தாளரும் கவின்மிகு*
*இலக்கிய உறவு கொண்டோம்.*
*உறவினரானோம் நண்பர்களானோம்!*

*திருவிழாவில் ஆரவாரமும் அன்பொலியும்*
*அலைமோதுமல்லவா?*
*இங்கும் கேட்டது. சிருங்காரச் சத்தம்!*
*கண்ணகியும் கோவலனும்*
*மாதவியும் மணிமேகலையும்*
*சாத்தனும் இளங்கோவடிகளும்*
*அமர்வு அறைகள் தோறும் உவப்புடன்*
*உலவினார்கள்!*

*திருவிழாவில் பண்டங்கள் விற்போரும்*
*வாங்குவொரும் உண்டல்லவா?*
*இங்கும் கற்பனையை விற்றார்கள்*
*கட்டுரையை விற்றார்கள் கரும்பனைய*
*கவிதையைக் கொடுத்தார்கள்*
*இவற்றை உள்வாங்குவோரையும் நாங்கள்*
*கண்டோமல்லவா?*

*தமிழறிந்ததால் வேந்தன் எனை*
*அழைத்தார் கவிஞரெனப்*
*பட்டம் தந்தார்!*
*ஓர் மனமாய் நிறைவேற்றும்*
*தீர்மானம் அரங்கேற்றும் நிகழ்விலி எனை*
*மேடையேற்றி மிக மகிழ்ந்தார்.*
*நன்றி! நன்றி! நன்றி!*

*வேட்டி கட்டி வீற்றிருந்தார்*
*நம் இராமையா அந்தமான் அனுப்பி*
*வைத்த அருமைத் தமிழ்த் தூதர்*
*அரங்கமே பெருமை கொண்டது!*

*புவிவேந்தன் மலைக்கும் வண்ணம்*
*கவிவேந்தன் கலைவேந்தன்*
*நடத்தினார் மாநாடு!*
*கரையிலாக் கல்விச் சேவையில்*
*அய்யா கே.எஸ்.ஆர்.*
*அவர்தம் புதல்வர் ஆர். சீனிவாசன்,*
*மருமகள் திருமதி கவிதா சீனிவாசன்,*
*தமிழ்த்துறைத் தலைவர்*
*முனைவர் மா. கார்த்திகேயன்*
*உள்ளிட்ட அனைவருக்கும்*
*நன்றியும் வணக்கமும்*
*நாளெல்லாம் சொல்லுவேன்!*

**கவிஞர் மா. உலகநாதன்,**
**திருவாரூர்.**
**(மாநாட்டில் பங்கேற்றுச் சிறப்பித்தவர்)**

# தொடரட்டும் போராட்டம்

**வை. சௌம்யா**
இளங்கலை கணிதவியல்துறை முதலாண்டு
'ஆ' பிரிவு

நம் நாட்டின் தேசியக் கொடியில் மூன்று வண்ணங்கள் உள்ளன. ஆனால் நம் நாட்டின் மக்கள் மனத்தில் ஒரே வண்ணம்தான் உள்ளது. அது வெள்ளை.

நம் மக்களின் மணம் வெள்ளை என்ற போதிலும் அவர்களின் வாழ்வு இருண்டே என்றும் காணப்படுகிறது. ஏன்? நாம் பெற்றது சுதந்திரம் என்று அனைவரும் உரைக்கின்றனர். ஆனால், அது சுதந்திரம் அன்று.

நம்முடைய பெருந்தலைவர்கள் மிகவும் கடினப்பட்டும் உயிரைத் தியாகம் செய்தும் பெற்றுத்தந்த சுதந்திரத்தை இன்று நாம் பயனற்று உபயோகிக்கிறோம். ஏன்? இதற்கு என்ன காரணம் என்று தெரியாமல் துடிக்கும் சில வெள்ளை மனமுள்ள மக்கள் இதற்கு ஒரு தீர்வு காண முயன்ற வரை போராட வேண்டும். வாழ்க இந்தியர்! வளர்க இந்தியா!

# பெற்றது சுதந்திரமா?

**எம். பிரதிஷா**
இளங்கலை கணிதவியல்துறை
முதலாண்டு 'ஆ' பிரிவு

சுதந்திர இந்தியாவில் நாம் அனைவரும் அடிமைப்பட்டுத்தான் இருக்கிறோம். அன்று நம் தலைவர்கள் வாங்கிக்கொடுத்த சுந்திரம் எங்கே மறைந்தது? இன்றோ நம் சமுதாயத்தில் பல ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டுவிட்டன. பணக்காரர், ஏழை, உயர்ந்தவர், தாழ்ந்தவர் இன்னும் பல. ஒருவர் மற்றவருக்கு அடிமைப்பட்டுத்தான் உள்ளனர். அன்று தாழ்வுமனப் பான்மை காந்தியடிகளுக்குத் தோன்றியிருந்தால் இன்று இந்தியா சுதந்திர நாடாக இருக்க இயலுமா? நம் நாட்டின் தூண்கள் இளைஞர்கள் என்கிறோம். ஆனால் அவர்களுக்கு ஏற்ற கல்வியோ, வேலையோ பணம் இருந்தால் மட்டுமே கிடைக்கும் நிலை உள்ளது. ஒருபுறம் வேலையில்லாத் திண்டாட்டம். மற்றொரு புறம் குழந்தைத் தொழிலாளர் கொடுமை. நினைத்துப் பார்க்கும்போது நாம் 'சுதந்திர இந்தியாவின் அடிமைகள்' என்பது புலப்படுகின்றது.

## போராட்டம் முடியவில்லை

**ஆர். செல்வம்**
இளங்கலை கணிதவியல்துறை முதலாண்டு
'ஆ' பிரிவு

"வறுமையின் கோடு
தமிழனின் வீடு
வறுமையின் வரி
தமிழனின் முகவரி
வறுமையின் நிறம்
தமிழனின் வரம்
வறுமையில்
வெந்தாலும், இறந்தாலும்
தமிழனின் போராட்டம்மட்டும்
முடிவதில்லை"

## அம்ம்மாஆ

**ஜெ. ஹெப்ஸிபா**
விரிவுரையாளர், இயற்பியல் துறை

*"சுமக்காமல் தாயானேன்*
*பசு அழைத்தது*
*அம்ம்மாஆ"*

## சுதந்திரப் போராட்டம்

**மூ. ரவீனா**
இளங்கலை கணினி பயன்பாட்டியல்துறை
முதலாண்டு 'ஆ' பிரிவு

இந்தியாவுக்கும் பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் மிக நீண்ட காலமாகவே தொடர்பிருந்தது. பண்டைய கிரேக்கம், ரோம் போன்ற நாடுகளுடன் இந்தியர்கள் கடல்வாணிகத்தொடர்பு கொண்டிருந்தனர். மார்க்கோபோலோ, யுவான் சுவாங், பாஹியான் போன்றோர் எழுதிவைத்துள்ள பயணக்குறிப்புகள் இந்திய மன்னர்களின் பிறநாட்டுத் தொடர்பு குறித்துத் தெரிவித்துள்ளன.

1453இல் கான்ஸ்டாண்டி நோபில் துருக்கியர் வசமானதால் ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கும் தரைவழி பாதிக்கப்பட்டது. ஆதலால் கடல்வழி காணவேண்டிய தேவை ஏற்பட்டது. வாஸ்கோ-ட-காமா இந்தியாவிற்கான கடல்வழியைக் கண்டுபிடித்தார். இதனால் ஐரோப்பியரின் வணிகத் தொடர்பு அதிகரித்தது.

போர்ச்சுகீசியர்கள், டச்சுக் காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் எனப் பலரும் விரும்பிய மிகப்பெரிய வணிக தேசமாக இந்தியா இருந்தது.

இந்த வணிகப்போட்டி அரசியல் ஆதிக்கப் போட்டியாக மாறத் தொடங்கியது. இந்திய அரசர்களிட மிருந்து ஒற்றுமையின்மை பிறநாட்ட வர்களை ஊக்குவித்தது. வணிகத் திற்காக இந்தியாவுக்கு வந்த அவர்கள் அரசியலில் ஈடுபட்டு, ஆதிக்கம் செய்பவர்களாக மாறினர். இந்த ஆதிக்கப்போட்டியில் ஆங்கிலேயர்கள் அதிக அளவில் வெற்றிபெற்றனர். கோவா, டையூ-டாமன் போர்ச்சுக் கீசியரின் வசமும், மாஹீ – ஏனாம், காரைக்கால், பாண்டிச்சேரி டச்சுக் காரர்கள் வசமும், மற்ற பகுதிகள் ஆங்கிலேயர்களின் பிடியிலும் இருந்தன. இத்தகைய அடிமைச்சங்கிலி இந்தியா வின் பல பகுதிகளையும் பிணைத்தது.

படிப்படியாக ஆங்கிலேயர்க்கு எதிராக இங்கே எதிர்ப்பு வலுத்தது. மக்கள் மனத்தில் சுதந்திரத் தாகம் எழுந்தது. ஆங்கிலேயருக்கு எதிரான கிளர்ச்சிகள் எழுந்தன. இறுதியல் மக்கள் சக்தி வெற்றிபெற்று மகத்தான மக்களாட்சியைத் தோற்றிவித்தது.

1857வரை இந்தியாவில் ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக கம்பெனி ஆட்சியே நடைபெற்றது. 1857முதல் இந்தியச் சுதந்திரப் போருக்குப் பின் விக்டோரியா பேரரசின் அறிக்கை வழியாக இந்தியாவின் ஆங்கிலேயே அரசை இங்கிலாந்து ஏற்றது. அதன்பின்னர் இந்தியாவில் கல்வி வளர்ச்சி, பத்திரிகை, அஞ்சல், தந்தி, போக்குவரத்து, தொடர்வண்டி போன்ற வசதிகள் பெருகின. சமூகச் சீர்திருத்தம் வளர்ந்தது. இதனால் படித்த இந்தியர்களிடையே அடிமை வெறுப்பும் சுதந்திர உணர்வும் வளர்ந்தன.

1885ஆம் ஆண்டு தோற்றுவிக்கப் பட்ட இந்திய தேசிய காங்கிரஸ், ஆங்கிலேயர் பிரித்தாளும் சூழ்ச்சி, வங்கப் பிரிவினை, திலகர் முதலானோர்களின் வீர முழக்கம் எல்லாம் சுதந்திரப் பயிர் முளைத்து வேரூன்ற துணைநின்றன. 1910களில் காந்தியடிகளின் அரசியல் நுழைவு சுந்திர தாகத்தை மக்கள் மத்தியில் பெருக்கெடுத்து ஓட உதவியது. படேல், நேரு, காமராஜ், இராஜாஜி, குமரன், வ.உ.சி. என இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வீரத்தியாகிகள் சுதந்திரத்திற்காகப் போராடினர். இவர்களால் அடுத் தடுத்து நடத்தப்பெற்ற உப்புச் சத்தியாகிரகம், ஒத்துழையாமை இயக்கம், வெள்ளையனே வெளி யேறு இயக்கம் பேன்றன சுதந்திரப் போரைத் தீவிரப்படுத்தின. 1947 ஆகஸ்ட் 15ஆம் நாள் இந்தியா விடுதலை பெற்றது.

# ஆஸ்கார் விருது

மு. சுகந்தினி
இளங்கலை இயற்பியல்துறை முதலாண்டு

ஆசுக்கர் விருது (ஆஸ்கார் விருது, ஒஸ்கார் விருது) எனப் பரவலாக அறியப்படும் அகாதமி விருதுகள் அமெரிக்காவில் திரைத்துறைக்கு வழங்கப்படும் மிகவும் முக்கிய விருதாகும். மேலும் உலகிலேயே அதிகளவில் தொலைக்காட்சி மூலம் பார்வையிடப்படும் விருது வழங்கும் விழாக்களில் இது முதன்மையான விழாவாகும்.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 1927ஆம் ஆண்டு ஆஸ்கார் கமிட்டி தொடங்கப்பட்டு முதன்முதலாக அகாதமி விருதுகள் மே 16, 1929 ஆம் ஆண்டு ஹாலிவுட் ரூஸ்வெல்ட் ஹோட்டலில் 270 மக்கள் முன்னிலையில் வழங்கப்பட்டன. பின்னர் மேபைர் ஹோட்டலில் பெரிதாக நடந்தது. மொத்தம் பதினைந்து விருதுகள் வழங்கப்பட்டன.

வெற்றியாளர்கள் நிகழ்ச்சிக்கு மூன்று மாதங்கள் முன்னதாக அறிவிக்கப் பட்டனர். 1930ஆம் வருடம் வெற்றி யாளர்கள் நிகழ்ச்சியின் இரவு 11 மணிக்கு பத்திரிகையில் வெளியிடப் பட்டன.

2011 ஆம் ஆண்டு வரை மொத்தம் 2789 விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒரு மனிதன் கைகளைக் கட்டிக்கொண்டு இருப்பது போன்ற தங்கச் சிலைதான் ஆஸ்கார் விருது. இந்தச் சிலையை ஜார்ஜ் ஸ்டான்லி என்ற சிற்பி வடிவமைத்தார். 13.5 அங்குல உயரமும் 8.5 பவுண்டு எடையும் உடைய அந்தச் சிலை 24காரட் தங்கத்தினால் ஆனது. தொடக்கக்காலத்தில் தங்க முலாம் பூசப்பட்ட வெண்கலச்சிலைகள் வழங்கப்பட்டன. பின்னர் தாமிரம், வெள்ளி என்று தொடங்கி தற்போது சுத்தத் தங்கத்தால் தயாரிக்கப் படுகின்றது. 50சிலைகள் தயாரிக்க நான்கு வாரங்கள் ஆகின்றன. இரண்டாம் உலகப்போர் சமயத்தில் உலோகங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால் பிளாஸ்டரில் தயாரிக் கப்பட்ட சிலைகள் வழங்கப்பட்டன.

நடிப்பு, இசை, கதை, ஒளிப்பதிவு, தொழில்நுட்பம் எனப் பல்வேறு பரிவுகளில் ஆண்டுதோறும் 25 விருதுகள் வழங்கப்படுகின்றன.

சரித்திரக் கட்டுரை – 08

# மாயன் நாட்காட்டி

உலகப் புகழ்பெற்ற தீர்க்க தரிசியான நாஸ்டர்டாமஸ் என்பவர் (1503 – 1566) எப்போது ஏப்ரல் மாத வெள்ளிக்கிழமை 25ஆம் தேதி வருமோ அன்று உலகம் அழியும் என எழுதி வைத்துள்ளார். 1666, 1734, 1886 மற்றும் 1943 ஆகிய ஆண்டுகளில் ஏப்ரல் 25ஆம் தேதி வெள்ளிக் கிழமையில் வந்தது. உலகம் அழியவில்லை.

இதனைப் போலவே கிரீஸ்வெல், ஜூனேலி ரோயர் போன்ற பல தீர்க்கத்தரிசிகள் உலகம் அழியும் என்று கணித்து சொன்ன வாக்குகள் பொய்த்தே இருக்கின்றன. லண்டன் வான சாஸ்திரக் குழு ஒன்றும் 1523ஆம் ஆண்டில் கணித்த கணிப்பின்படி 1.2.1524 பெரும் வெள்ளத்தால் லண்டன் மாநகரம் அழியும் எனச் சொல்லியது. ஆனால் அத்தேதியில் துளி மழைகூடப் பொழியவில்லை.

ஜெர்மனியில் ஜோஹன்னஸ் ஸ்ட்ஃப்ன எனும் கணிதமேதையும் இப்படித்தான் வெள்ள அபாயத்தால் ஜெர்மனி நகரம் அழியும் என்றார். அன்று பயங்கரமான மழையும் அவர் சொன்னதைப்போல பெய்தது. ஆனால் அவர் சொன்னது போன்ற பிரம்மாண்ட அழிவு ஏதும் நிகழவில்லை. மாயன் நாட்காட்டி 21.12.2012இல் முடிவடைகிறது. அப்படியென்றால்?...

கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பு தென் அமெரிக்காவில் மாயா என்ற ஓர் இனம் இருந்தது. 3500 ஆண்டுகள் வாழ்ந்த இந்த இனமானது கடந்த கி.பி.15ஆம் நூற்றாண்டில் அழிந்தது. இந்த இனத்தினர் விஞ்ஞானிகளைவிடவும் புத்திசாலியாக வாழ்ந்ததாக சரித்திரச் சான்றுகள் கூறுகின்றன.

மாயன் இனத்தவர் கட்டடக் கலை, வான சாஸ்திரம், ஜோதிடம், அமானுஷ்யம், கணித சூத்திரம் போன்ற அனைத்துக் கலைகளிலும் தேர்ச்சி பெற்ற வித்தகர்களாக இருந்தனர். இன்றைக்கு இருப்பது போன்ற நாட்காட்டியினை அவர்களும் வைத்திருந்தனர். இந்த நாட்காட்டி கி.மு. 313இல் தொடங்கியது. இதன்படி டிசம்பர் 2012இன் 21ஆம் தேதியுடன் முடிவடைகிறது. அதனால் உலகம் அந்தத் தேதியுடன் முடிவடையும் என்று அவர்கள் ஞானதிருஷ்டியால்

உணர்ந்து முற்றுப்புள்ளி வைத்த தாக ஒரு நம்பிக்கை இருக்கிறது. அதாவது சூரிய மண்டலத்திற்கு ஏழாவது நாள் என்பது பூமியைப் பொறுத்தவரை 25,625 ஆண்டுகளாம். இதனை மாயன் காலண்டர் ஐந்து கால கட்டங்களாகப் பிரிக்கிறது. ஒவ்வொரு கால கட்டமும் 5125 வருடங்களைக் கொண்டிருக்கிறது. இதன்படி நான்கு கால கட்டங்கள் முடிவடைந்து இப்போது ஐந்தாவது காலகட்டம் நடந்துகொண்டிருக்கிறது. அந்த நாட் காட்டி 21.12.2012இல் முடிவடைகிறது. அதன்படி 21.12.2012இல் உலகு அழியும் என்று பலர் நம்புகிறார்கள். சிலர் மீண்டும் நாட்காட்டி முதலிலிருந்து தொடங்கும் என்று எதிர்பார்க்கின்றனர்.

நாட்காட்டி முடிவடைந்ததே தவிர 2012இல் உலகம் அழியும் என்று மாயன் இனம் எங்கும் சொல்லவில்லை. அவர்கள் தனது இனத்தின் அழிவைப் பற்றிக் கூடச் சொல்லவில்லை. அது அவர்களின் கணக்குபடியான யுக மாற்றத்திற்காகவே இருக்கும். அப்படியா?...


மாயா நாகரிகம் என்பது பண்டைக்கால மத்திய அமெரிக்க நாகரீகம் ஆகும். இப்பகுதி, தற்காலத்தில் இருக்கும் மெக்சிகோ, குவாத்தமாலா, ஹொண்டுராஸ் போன்ற நாடுகள் விரவியிருக்கும் மத்திய அமெரிக்கப் பகுதிகளை உள்ளடக் கியது. கொலம்பஸுக்கு முந்திய கால அமெரிக்காவின் முழு வளர்ச்சி பெற்ற ஒரே எழுத்து மொழியைக் கொண்டிருந்தவர்கள் இந்த நாகரிகத் தைச் சேர்ந்த மக்களே.

மாயன் அரசர்கள், மக்களால் கடவுள்போல கருதப் பட்டனர். கி.பி. 250 முதல் கி.பி.900 வரை இவர்களது காலம் ஆகும். பிரவுன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஸ்டீபன் ஹூஸ்டன் தலைமையிலான அகழ் வாராய்ச்சியாளர்கள், கவுதமாலா நாட்டில் அகழ்வாராய்ச்சி மேற் கொண்டனர். கவுதமாலா நாட்டில் சுமார் 1600 ஆண்டுகள் பழமையான மாயன் மன்னரின் கல்லறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதிலி ருந்து ஆறு குழந்தைகளின் எலும்புக்கூடுகளும், பீங்கான், துணிகள் உள்ளிட்ட ஏராளமான பொருட்களும் கண்டெடுக் கப்பட்டுள்ளன. இந்த பொருட்கள், மாயன் மன்னர் பயன்படுத்தியதாக இருக்கலாம் என்று ஆராய்ச் சியாளர்கள் கருதுகின்றனர். குழந்தைகள், மாயன் அரசன் இறந்தபோது அவருக்காகப் பலி கொடுக்கப்பட்டவர்களாக இருக்க லாம் எனக் கூறப்படுகிறது. இது,

கி.பி. 350 – 400-க்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த மாயன் மன்னரின் கல்லறையாக இருக்கலாம் எனத் தெரிகிறது. கல்லறையில் குடைந்தும், செதுக்கியும் உருவாக்கப்பட்ட சிற்பங்கள் ஏராளமாக உள்ளன. கல்லறையில் இருந்து எடுக்கப்பட்ட பொருட்கள் குறித்து ஆராய்ச்சி நடந்து வருகிறது. இதன் மூலம் மேலும் பல தகவல்கள் தெரியவரும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

ஐரோப்பிய ஏகாதிபத்திய துப்பாக்கிகளுக்குத் தப்பிய வட மற்றும் தென் அமெரிக்க பூர்வகுடியினங்கள் வெகு சிலவே. இம்மக்களின் கலாச்சாரமும் வரலாறும் நான்கைந்து நூற்றாண்டுகளில் இருந்த இடம் தெரியாத அளவிற்கு மனிதாபிமானமற்ற முறையில் அழிக்கப்பட்டுவிட்டன.

மாயன் இனத்தவர் கணிதம், எழுத்துமுறை, வானியல் போன்ற துறைகளிலெல்லாம் மேம்பட்டிருந்தனர். மிக விசாலமான, நுணுக்கமான கட்டடக்கலை மாயன் இனத்தவரின் சிறப்பாகும். கி.மு.150 களில் மாயன் நாகரிகம் உச்சத்தை அடைந்தது. அதன்பின் பல்வேறு காரணங்களால் அது அழியத் தொடங்கியது. ஸ்பெயின் நாட்டவர் குடியேற்றம், விசித்திரமான மூட நம்பிக்கைகள், பங்காளிச் சண்டைகள் மற்றும் முறையற்ற விவசாயம் போன்றவை மாயன் கலாச்சார பேரழிவிற்குக் காரணிகளாக இருக்கலாம் என நிபுணர்கள் கருதுகிறார்கள். தற்காலத்தில்சுமார் ஆறு இலட்சம் மாயன் இனத்தவர் மெக்சிகோ, குவாத்திமாலா போன்ற நாடுகளில் இருப்பதாக அறியப் படுகிறது.




20 அடிமான எண் முறையை மாயன்கள் பயன்படுத்தினர். மாயன்களின் கணிதத்திறமைக்குச் சான்று அவர்களின் பூஜ்ஜியம் பயன்பாட்டு முறையாகும். மிக வளர்ச்சியடைந்ததாகக் கருதப்படும் கிரேக்க நாகரிகங்கள் கூடப் பூஜ்ஜியம் பயன்பாட்டு முறையை அராபியர்களிடம் இருந்தே அறிந்து கொண்டார்கள். மாயன்கள் எண் களைக் குறிப்பிட மிக எளிமையான

அதே சமயத்தில் மிகப் பெரிய எண்களைக் கூட எழுதவல்ல ஒரு குறியீட்டு முறையைக் கையாண் டார்கள். இக்குறியீட்டு முறை ஒரு '_' மாதிரியான கோடு ஒரு புள்ளி ஒரு நீள்வட்டக் குறி ஆகியவற்றை மட்டுமே உள்ளடக்கியது.

இதன் எண்கள் மொத்தம் மூன்று குறியீடுகளை மட்டுமே கொண்டவை. அவை சுழி, ஒன்று (ஒரு புள்ளி), ஐந்து (ஒரு கோடு) ஆகியன ஆகும். எடுத்துக் காட்டாக, 19 என்ற எண் நான்கு புள்ளிகளையும் மூன்று கோடுகளைக் கிடைமட்டமாக ஒன்றன் மேல் ஒன்று அடுக்கியும் காட்டப்படுகிறது.

எகிப்தியப் பிரமிடுகளை அடுத்து இந்நகரில் காணப்படும் பிரமிடுகளே பிரசித்தி பெற்று விளங்குகிறன. இப்பிரமிடுகளைச் சுற்றிலும் நான்கு பெரிய படிகட்டுகளும் அவற்றுள் அடங்கிய 365 படிக்கட்டுகளும் காணபடுகிறது. இவையாவும் ஒரு ஆண்டிற்கான நான்கு காலங் களையும் 365 நாட்களையும் குறிப்பதாகக் கூறப்படுகிறது. அவர்கள் சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன் போன்றவற்றின் சுழற்சி முறைகளை வெகுவாக அவதா னித்து ஆவணப்படுத் தியிருந்தனர். சந்திர மற்றும் சூரிய கிரகணங் களை முன்கூட்டியே கணக்கீட்டுத் தீர்மனிக்கும் அளவிற்குத் திறன் பெற்றிருந்தனர். சடங்குகளில் அதீத நம்பிக்கை கொண்டிருந்த மாயன்கள் வானியல் நிகழ்ச்சிகளை அடியொட் டியே சடங்குகளை நடத்தினர். ட்ரெடெக்ஸ் எனப்படும் மாயன் பஞ்சாங்கக் குறிப்பேட்டிலிருந்து இதற்கான ஆதாரங்கள் பெறப் பட்டுள்ளன.

மாயன் நகர பகுதியில் காணப்படும் Stelae எனப்படும் கல் வகையில் இவர்களின் ஆட்சிமுறை, போர்களில் பெற்ற வெற்றி மற்றும் பல முக்கிய தகவல்கள் Heiroglyphik எழுத்து வடிவில் செதுக்கப் பட்டுள்ளது. மாயன்கள் தூர தேச வியாபாரத்திலும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதும் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட உண்மையாகும்.

Bonamak என்ற இடத்தில் அமைந்த மாயன்களின் சிற்ப கலைகள் எவ்விதப் பாதிப்பும் இன்றிக் கிடைக்கப் பெற்றதால் ஆராய்ச்சியாளர்கள் இவற்றை முறையாகத் தங்களது ஆய்விற்குப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. இச்சிற்பங்கள் மாயன்களின் நாகரிக வளர்ச்சியைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன.

மாயாக்கள் பிரமிடுகளின் மேல் கோவிலை அமைத்துள்ளார்கள். பிரமிடுகள் உயரமான மலை பாங்கான இடத்தில் அமைந் திருக்கும் பிரமிடுகளின் மேல் கோவிலை அமைப்பதால் இறைவன் இருக்கும் சொர்க வாசலை அவர்கள் சுலபமாக நெருங்க முடிவதாக நம்பிக்கை கொண்டுள் ளனர்.

மாயர்கள் உலகை வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு எனப் பிரித்திருந்தனர். மாயர்களின் வானியல் ஒரு மரமாக அடையாளப் படுத்தப்பட்டிருந்தது.

மரத்தின் மேற்பகுதி சொர்க்க மாகும். அது இறைவனின் வசிப்பிட மாகும். மரத்தின் வேர்ப்பகுதி பாதாள உலகமாகும். சூரியன் இரவில் பாதாள உலகிற்கு சென்று ஓய்வெடுக்கிறான். (மாயர்களின் மொழியில் Xibalba - பாதாள உலகம், Cab -சொர்க்கம் , Caan - புவி, Yakche – அண்டத்தை குறிக்கும் மரம்.)

மாயன்களின் எழுத்து வகைகள் நீண்ட நாட்கள் ஆராய்ச்சியாளர் களின் பார்வையில் இருந்தவை யாகும். கி.பி.19ஆம் நூற்றாண்டில் மாயா நகர பகுதி கண்டுபிடிக்கப் பட்டது. கி.பி.20ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை அவையாவும் புரியாத புதிராகவே இருந்தன.

1960 முதல் 1970 வரையில்



அனைத்து எழுத்துகளுக்கும் பொருள் கண்டுபிடிக்கப்பட்டு படிக்கப்பட்டன. இதன் வழி 'ஸ்பெயின்' நாட்டினரின் படையெடுப்பும், பல்லாயிரக் காணக் கான புத்தகங்கள் எரிக்கப்பட்டதும் வருத்தத்துடன் தெரிந்து கொள்ள முடிந்தது. அவர்களின் நான்கு புனித நூல்களில் மூன்றும் நான்காம் நூலின் சில பக்கங்களும் மட்டுமே கிடைத்துள்ளன.

ஆராய்ச்சியாளர்கள் மாயாக்களின் நாகரிகம் கி.மு. 2000ஆம் ஆண்டில் தொடங்கி சிறுகச் சிறுக வளர்ச்சி யடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள் ளார்கள். கி.மு. 2000 முதல் 250 வரை வளர்ச்சிக் காலமாகவும், 250 தொடங்கி 900 வரை மாயன்களின் பொற்காலமாகவும் கருதப்படுகிறது. ஏழாம் மற்றும் எட்டாம் நூற்றாண்டுகள் மாயன்களின் உச்சகட்டப் பொற்காலம் எனவும் கூறுகிறார்கள்.

விண்மீன் மண்டலத்தின் ஒருநாள் என்பது புவியின் 25,625 வருடங்களைக் கொண்டது. இதனை மாயன் நாட்காட்டி 5,125 வருடங்களைக் கொண்ட ஐந்து காலகட்டங்களாகப் பிரிக்கின்றது. அதன்படி எமது பூமி இப்போது ஐந்தாவது காலகட்டத்தின் இறுதி யில் இருக்கின்றது என்கின்றது. 2012 டிசம்பர் 21 இக்கட்டத்தின் முடிவுடன் அடுத்த புதிய யுகத்தினுள் மனித சமூகம் நுழையவிருக்கின்றது என்கிறது மாயன். எமது சூரியன் அடிக்கடி அதன் மத்திய விண்மீன் மண்டலத்தினால் புத்துயிர் பெறச் செய்யப்படுகின்றது என்பதனை மாயன் சமூகம் ஒவ்வொரு 5,125 வருடங்களுக்கும் ஒருமுறை இச்செயற்பாடு நடைபெறுவதாகத் தெரிந்திருந்தார்கள்.

2012இல் நடைபெறவிருக்கின்ற அவ்வாறான ஒரு செற்பாட்டினால் எமது சூரியனின் ஒளிரும் தன்மை அதிகரிப்பதுடன் சூரியனில் இருந்து அதிகமான தீச்சுவாலைகள் தோன்றும் என மாயன் குறிப்பிடுகின்றது.

அந்தவேளையில் புவியின் காந்தப் புலங்களிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படும் என இன்று மாயன் நாட்காட்டியினை மேற்கோள் காட்டும் சிலர் குறிப்பிடுகின்றனர். மாயன் கணிப்பின்படி இறுதியாக நான்காவதாக வாழ்ந்த மனித சமூகம் கி.மு. 3113 வருடங்களுக்கு முன்பு பாரிய வெள்ளப்பெருக்கினால் மிகவும் அரிதானவை தவிர ஏனையவை அழிந்திருக்கின்றன.

அதனால் தமது சமூகத்தின் அடுத்த அழிவு தொடர்பாக அறிந்து கொண்டால் அதிலிருந்து தமது சமூகத்தைப் பாதுகாக்க முடியும் என மாயன் சமூகம் இது தொடர்பான விஷயங்களில் அதிக ஆர்வம் கொண்டதாக இருந்திரு கின்றது. சூரியத் தொகுதியின் அசைவு பற்றி மாயன் சமூகத்தினர் அன்றைய காலத்திலேயே அறிந்து வைத்திருந்தனர். மேலும் அவர்கள் பூமி சூரியனைச் சுற்றுவது போன்று ஞாயிற்றுத் தொகுதி அதன் விண்மீன் மண்டலத்தினை வலம் வருவதாக நம்பினர். இதன்போது ஏற்படுகின்ற மாற்றங்களைக் காட்டுகின்ற சுழற்சி நிகழ்வுகளின் நாட்காட்டி ஒன்றை அமைத்தி ருந்தனர். அதன் அடிப் படையிலேயே இன்று இக் குழப்பத்துக்கான ஆரம்பங்கள் தோன்றியிருக்கின்றன.

சூரியனில் இருந்து கடும் தீச்சுடர் 2012இல் பூமியை அடையும் அபாயம்: அறிவியலாளர்கள் எச்சரிக் கை என்று இந்திய நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டது.

கடந்த 11 ஆண்டுகளாக அமைதியாக இருந்த சூரியன் தற்போது விழிப்படைந்துள்ளதாக அறிவியலா ளர்கள் தெரிவித் துள்ளனர். பூமியை நோக்கி அது ஒரு பெரும் சூறாவளியை அனுப்பும் அபாயம் உள்ளது. வெரசிங்டனில் கடந்த செவ்வாய்க்கிழமை ஜூன் எட்டாம் நாளான்று விண்வெளி காலநிலை பற்றிய அமர்வு இடம்பெற்றது. அந்நிகழ்வில் அரசு அதிகாரிகள், திட்டமிடல் அதிகாரி கள், ஆய்வாளர்கள், மற்றும் பொது மக்கள் கலந்துகொண்டு கி.பி.21ஆம் நூற்றாண்டில் தொழில்நுட்ப உபர கணங்களைச் சூரியனிடம் இருந்து எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்து ஆராய்ந்தார்கள். “நமது சூரியன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து விழித்திருக்கிறது. இன்னும் சில ஆண்டுகளில் அதன் உக்கிரமான தாக்கத்தை நாம் உணர முடியும்” என நாசாவின் ஈலியோ இயற்பியல் துறைத் தலைவர் ரிச்சார்ட் பிஷர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

சூரிய நடுக்கத்தால் கிளம்பும் தீச்சுடர்களின் செறிவு மாறுபடக் கூடியவை. அது பூமியின் காந்தப் புலத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். இவை பெரும் கதிரியக்கத் தன்மையுடையவை. மனித இனம் இக்கதிரியக்கத்தில் இருந்து இயற்கை யாகவே பாதுகாக்கப் பட்டிருந்தாலும், தொழில்நுட்பம்

இதனால் பெரும் பாதிப்படையும். தீச்சுடரில் இருந்து கிளம்பும் வெப்பம் செய்மதிகளைச் செயலிழக்கச் செய்யலாம். அத்துடன் ஊடுகதிர் அலைகள் வானொலித் தொடர்புகளைப் பாதிக்கும். இருப்பினும் "பெரும் ஒளிவட்ட வெளித்தள்ளுதல்" (Coranal mass ejection - CMES) மனித இனத்தைப் பாதிக்கும் எனக் கூறப்படுகிறது.

இது 2012ஆம் ஆண்டில் நிகழலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. ஒளிவட்ட வெளித் தள்ளுதலின் போது சூரியனின் ஒளிவட்டத்தில் இருந்து அல்லது அதன் வெளி வளிமண்டலத்தில் இருந்து வாயுக்கள் வெளியேற்றப் படுகின்றன.

பெருமளவு கதிரியக்கப் பொருட்களைக் கொண்டிருக்கும் இவ்வாயுக்கள் பூமியை மூன்று முதல் ஐந்து நாட்களுக்குள் அடையக்கூடும். அதிதொழில் நுட்பத்தைக் கொண்டுள்ள வளர்ச்சி யடைந்த நாடுகளின் நகரங்களில் இதனால் மின்சாரத் தடை ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது கத்ரீனா சூறாவளியினால் ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்பை விட 20 மடங்கு அதிகமாக இருக்கும் என அறிவியலாளர்கள் கருதுகிறார்கள்.

புவி, ஞாயிற்றுத் தொகுதி அதன் விண்மீன் மண்டலம் தொடர்பான செயற்பாடுகள் சார்ந்து ஒரு தாக்கம் இடம்பெறுமானால், நிச்சயமாக அது சில வினாடிகளுக்கு மட்டுமோ அல்லது சில நிமிடங்களுக்கோ நடை பெறுவதல்ல. எத்தகைய மாற்றங் களாயினும் அவை குறிப் பிட்ட காலங்களுக்கு முன்னிருந்தே சிறிது சிறிதாகத் தென்பட ஆரம்பித்து, பின்னர் குறித்த காலத்தில் இருந்து சிறிது சிறிதாகவே முடிவடைய வேண்டும்.

இயற்கையை நாம் ஓரளவிற்கே அனுமானிக்க இயலும். ஆதலால், காத்திருந்துதான் இவற்றை எதிர் கொள்ள வேண்டும். ஆக, மாயன் நாட்காட்டி யுகத்தின் முடிவா? புது யுகத்தின் தொடக்கமா? அது புதிர்தான்.

*வரலாற்றுத் தகவல்களை மாணாக்கர்களுக்கு அறிவிக்கும் பொருட்டு இப்பகுதி தமிழ்த்துறையால் வெளியிடப்படுகின்றது.*

**தகவல், படங்கள் நன்றி:** ***http://ta.wikipedia.org***

## எதார்த்தம்

**எஸ். லோகேஸ்வரன்**
இளங்கலை நுண்ணுயிரியல்துறை முதலாண்டு

*"எதிர்பார்த்த வாழ்க்கை*
*யாருக்கும் அமைவதில்லை.*
*ஆனாலும்,*
*எதிர்பார்க்காமல் யாரும்*
*வாழ்வதில்லை."*

## நட்(பூ)பு

**சு. ஸ்ரீதர்**
இளங்கலை நுண்ணுயிரியல்துறை முதலாண்டு

*"பூத்த பூவை கிள்ளி விடாதே!*
*கிள்ளிய பூவை வாட விடாதே!*
*வாடிய பூவை எறிந்து விடாதே!*
*எறிந்த பூவாய் என்னை*
*மறந்து விடாதே!"*

## விடியலுக்கு வந்த மடல்மாலை

"தங்கள் கல்லூரியின் விடியல் மாத இதழ் (பொழுது – 39 ஜூலை2012) கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. பாராட்டுகள். பயனுள்ள கட்டுரைகள், சிந்தனையைத் துண்டும் கவிதைகள், படைப்பாளர் பற்றிய குறிப்புகள், அறிவிப்புகள் எனச் சிறப்பாய் வடிவமைக்கப் பட்டுள்ளது. புதிய புதிய தேவை யுள்ள, பயனுள்ள, செய்திகளை, கருத்துகளைத் தந்து விடியல் பயணம் தொடரட்டும். வளரட்டும்."

வாழ்த்துகளுடன், அன்பன்
**முனைவர் எஸ். ஈஸ்வரன்,**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நேஷனல் கல்லூரி (தன்னாட்சி), திருச்சி.

Ragging is an offence. Any student found guilty of ragging will be dismissed from the college. Whoever directly or indirectly commits, participates in, abets or propagates ragging within or outside the educational institution, shall be punished with imprisonment for a term which may extend to two years and shall also be liable to a fine which may extend to ten thousand rupees. (Act, 1997)

**The students are requested to keep our campus ragging free.**

*தமிழ்த்துறையில் வாரம் இரண்டுநாட்கள் (செவ்வாய், வியாழன்) மாலை 4.00 மணிக்குப் **'பொன்மாலைப்பொழுது'** என்ற கதை, கவிதை அரங்கேற்ற நிகழ்ச்சி நடைபெறும். மாதந்தோறும் நான்காவது வாரம் மாலை 3.30 மணிமுதல் **'கவியரங்கம்'** நடைபெறும். படைப்புகளை அரங்கேற்ற விரும்புவோர் தங்களின் பெயர்களைத் தமிழ் விரிவுரையாளர்களிடம் முன்பதிவுசெய்யவும்.*